

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மான் கொம்பினால் குத்தப்பட்டு மரணமடைந்த மாதவன்பிள்ளை என்பவரின் மனைவி பேபி- யிடம் முதலமைச்சரின் நிவாரண நிதியுதவியாக ரூ. 3 இலட்சத்திற்கான காசோலையினை கல்குளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இன்று (09.06.2016) நடைபெற்ற வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) நிகழ்ச்சியில் வழங்கினார். மாவட்ட வன அலுவலர் திரு. விஷ்மிஜூ விஸ்வநாதன் இ.வ.ப., உடனுள்ளார்.

செ.வெ.எண். 342 /2016 நாள்: 09.06.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மான் கொம்பினால் குத்தப்பட்டு, மரணமடைந்த திரு. மாதவன்பிள்ளை என்பவரின் மனைவி பேபியிடம் ரூ. 3 இலட்சத்திற்கான காசோலையினை இன்று (09.06.2016) நடைபெற்ற வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) நிகழ்ச்சியில் வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், புலியூர்குறிச்சியில் அமைந்துள்ள உதயகிரி கோட்டை பல்லுயிர் பூங்காவில் மான்களுக்கு உணவு அளிக்க சென்ற, பத்மநாபபுரம் ஆ கிராமத்தைச் சேர்ந்த திரு. குமாரசாமி பிள்ளை என்பவரின் மகன் திரு. மாதவன்பிள்ளை (வயது 63) அவர்களை 28.05.2016 அன்று மான் கொம்பினால் குத்தப்பட்டு, படுகாயமடைந்து மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழ்ந்தார். அவரது குடும்பத்தினரின் வறுமையினை கருத்தில் கொண்டு, வனத்துறை மூலம் ரூ. 3 இலட்சம் வழங்க ஆணையிட்டுளார்கள்.

அதனடிப்படையில் கல்குளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இன்று (09.06.2016) நடைபெற்ற வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) நிகழ்ச்சியில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், அன்னாரது மனைவி பேபி (வயது 60) அவர்களிடம் முதலமைச்சரின் நிவாரண நிதியுதவியாக ரூ. 3 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கினார். பின்னர் அன்னாரது மனைவி பேபி, மகள்கள் திருமதி. குமாரி பாலா, திருமதி. சிந்துஜா ஆகியோர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினை தெரிவித்தார்கள்.

நிகழ்ச்சியில் மாவட்ட வன அலுவலர் திரு. விஷ்மிஜூ விஸ்வநாதன் இ.வ.ப., கல்குளம் வட்டாட்சியர் திரு. ஒய். குமாரதாஸ், பூதப்பாண்டி வன அலுவலர் திரு. ஆர். நாகராஜன், உதவி ஆணையர் (ஆயம்) திரு. எ. காளிமுத்து உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.